


# "உலகமயமாகிறது திராவிடம்!"

**கழக இளைஞர் அணி நடத்திய 'தி.மு.க 75 அறிவுத் திருவிழா' நிகழ்ச்சியின் ஒரு பகுதியாக நடைபெற்ற 'இருவண்ணக் கொடிக்கு வயது 75' கருத்தரங்கத்தில், 'I Belong to The Dravidian Stock' என்ற தலைப்பில், கழக மாணவர் அணி துணைச் செயலாளர் தமிழ் கா.அமுதரசன் அவர்கள் ஆற்றிய உரை :**

"இன்றைக்கு தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் தலைவர் கலைஞரின் வழியில் ஆட்சி நடத்திக் கொண்டிருக்கக்கூடிய, ஒப்பாரும் மிக்காரும் இல்லாத திராவிட மாடல் ஆட்சியின் நாயகர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின், அண்ணாவின் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டு, பீடுநடை போட்டு வழிநடத்திக் கொண்டிருக்கிறார்.

**துணிச்சல்மிக்கவர்கள்**

*'I Belong to Dravidian Stock'* என்று சொன்னபோது' நாங்கள் தனித்துவமானவர்கள்' என்றாரே அண்ணா, எப்படி தனித்துவமானவர்கள் என்று சொன்னால், கைது நடவடிக்கைகளை எடுத்துகொள்வோம். தந்தை பெரியார் நீதிமன்றத்துக்குப் போகிறார். 'என்னுடைய கருத்துகள் உங்களுடைய கருத்துக்களில் இருந்து முற்றிலும் மாறுபட்டவை. ஆகையினால், நேரத்தை கடத்த வேண்டாம். எவ்வளவு உச்ச பட்சமான தண்டனை கொடுக்க முடியுமோ எனக்கு அவ்வளவு தண்டனையைக் கொடுத்து அனுப்புங்கள்' என்று நீதிபதியிடம் சொல்கிறார்.

இந்திய இராணுவத்தின் துப்பாக்கிகள் நெஞ்சுக்கு நேராக இருந்த பொழுது, "இந்தி வீழ்க, தமிழ் வாழ்க" என்று சொல்லி பேரறிஞர் அண்ணாவும், தலைவர் கலைஞரும் சிறை சென்றார்கள். மிசா கொடுமையால், இந்திய நாட்டில் இருக்கக்கூடிய அத்தனை ஜனநாயக சக்திகளும் ஒடுக்கப்பட்டிருக்கக்கூடிய சூழலில், காவல் அதிகாரிகள் கைவிலங்கோடு கோபாலபுரம் இல்லத்திற்கு வருகிறார்கள். 'உங்களுடைய மகன் ஸ்டாலினைக் கைது செய்ய வேண்டும்' என்று கலைஞரிடம் சொல்கிறார்கள்.

திருமணம் ஆன சில மாதங்களிலேயே சிறைக்குச் சென்று, சிறைச்சாலை கொட்டடியில் வதைபட்டபோதும், 'ஜனநாயகத்தைக் காப்பாற்றுவோம், பாசிசத்தை வீழ்த்துவோம்' என்று நெஞ்சுரத்தோடு முழங்கிய தலைவர், இன்றைய முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் என்கின்ற அந்த மகத்தான தலைவர்.

அதே வழியில் வருகிறார் எங்களுடைய இளம் தலைவர். இந்த நாட்டில் இருக்கக்கூடிய சிறு பான்மையின மக்களை, ஒடுக்கப்பட்ட, தாழ்த்தப் பட்ட மக்களை இரண்டாம் தர குடிமக்களாக மாற்ற வேண்டும் என்று 'குடியுரிமை திருத்தச் சட்டம்' என்கின்ற அந்த கொடிய சட்டம் கொண்டு வரப்பட்டபோது, அந்த சட்ட நகலைக் கிழித்து, கொளுத்தி கைதானவர் எங்களுடைய இளம் தலைவர் அண்ணன் உதயநிதி ஸ்டாலின். அன்றைக்கு காவல்துறை அதிகாரிகளிடம் சொன்னார். 'என்னைக் கைது செய்யுங்கள், என் தொண்டர் மேல் கை வைக்காதீர்கள்' என்று,



**தமிழ் கா.அமுதரசன்**
**கழக மாணவர் அணி துணைச் செயலாளர்**

**திராவிடம் என்பது உலகமயம்**

நாங்கள் திராவிட இனத்தைச் சார்ந்தவர்கள் *I Belong to Dravidian Stock* என்று சொன்னால், அது ஒரு இனத்திற்கான குழுவாக, அடையாளச் சொல்லாக இருந்தது போய், இன்றைக்கு கொள்கை அடையாளமாக மாறிப் போய்விட்டது. 'திருத்தணி, கும்மிடிப்பூண்டியைத் தாண்டினால், யாராவது திராவிடர் என்று சொல்வார்களா?' என்று சிலர் கேட்கிறார்கள். இந்திய தேசிய காங்கிரஸின் தலைவராக இருக்கும் மல்லிகார்ஜுன கார்கே, 'நான் திராவிட இனத்தைச் சேர்ந்தவன். கர்நாடகாவில் இருந்து வருகிறேன்' என்கிறார்.

மேற்கு வங்காளத்தில் இருக்கக்கூடிய நாடாளு மன்ற உறுப்பினர்கள், வடகிழக்கு மாநிலத்தில் இருக்கக்கூடிய நாடாளுமன்ற உறுப்பினர்கள்கூட இப்போது 'நாங்களும் திராவிடர்கள்' என்கிறார்கள். கம்யூனிசம் என்பது ஒரு மொழிக்கோ, ஒரு நாட்டினருக்கோ, ஒரு குறிப்பிட்ட சமுதாயத்திற்கோ மட்டும் சொந்தமானது என்று சுருக்கி விட முடியாது. ஆஸ்திரேலியாவில் இருக்கிறவனும் கம்யூனிஸ்டாக இருப்பான். அமெரிக்காவில் இருக்கக்கூடியவனும் கம்யூனிஸ்டாக இருப்பான். அதேபோல நாளை லண்டனிலோ ஜப்பானிலோ உலகத்தின் வேறு எந்தப் பகுதியில் இருப்பவர்கள் கூட, திராவிட சங்கம் தோற்றுவிக்கலாம்.

இன்றைக்கு திராவிடம் என்று சொன்னால், அது உலகளாவிய தத்துவமாக, ஆதிக்கத்தை எதிர்க்கக்கூடிய சொல்லாக, சனாதனத்தை எதிர்க்கக் கூடிய சொல்லாக, தூய்மைவாதத்தை ஒழிக்கக்கூடிய தத்துவமாக, பன்முகத்தன்மையை ஏற்றுக் கொள்ளக் கூடியதாக, யாரெல்லாம் சமூகநீதியையும் சமத்துவத்தையும் ஏற்றுக் கொள்கிறார்களோ, அவர்களும் ஏற்றுக்கொள்ளக் கூடிய தத்துவமாக, திராவிடம் கொள்கை அடையாளமாக மாறிவிட்டது.

**ஒடுக்குமுறை**

'சூத்திரனுக்கு எதைக் கொடுத்தாலும் கல்வியைக் கொடுக்காதே' என்றார்கள். அதையும் மீறி படித்தால், அவன் காதுகளில் ஈயத்தைக் காய்ச்சி ஊற்று, கண்களை நோண்டு, நாக்கை அறுத்து எடு' என்றார்கள். அதற்கு எதிரான முழக்கம்தான் திராவிடம். அதை நடைமுறைப்படுத்திக் காட்டியவர் நம்முடைய தலைவர் கலைஞர்.

இன்றைக்கு சிலர், 'தி.மு.க-வா உங்களைப் படிக்க வைத்தது?' என்கிறார்கள். ஆமாம், தி.மு.க. தான் படிக்க வைத்தது, கலைஞர்தான் படிக்க வைத்தார். 1984-இல் மருத்துவம், பொறியியல் படிப்புக்கு நுழைவுத் தேர்வு முறையைக் கொண்டு வந்தார் எம்.ஜி.ஆர். 22 ஆண்டு காலம் போராடி, இன்றைக்கு பொறியியல் படிக்கும் யாருக்கும் நுழைவுத் தேர்வு கிடையாது, இன்றைக்கு வீட்டுக்கு ஒரு இன்ஜினீயர் இருக்கிறார் என்றால், அதற்கு காரணம் கலைஞர்.





இறப்பதற்கு மூன்று நாட்களுக்கு முன்பு, தந்தை பெரியார் தியாகராய நகர் கூட்டத்தில் பேசினார். 'இந்த நாட்டில் ஒரு தாழ்த்தப்பட்ட, ஒடுக்கப்பட்டவனால் ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். ஆக முடியும், இந்த நாட்டின் குடியரசுத் தலைவராக முடியும், பிரதமராக முடியும். ஆனால், இந்த நாட்டில் ஒரு தாழ்த்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட, பிற்படுத்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த ஒருவனால், அவன் விரும்பிய கோயில் கருவறைக்குள் செல்ல முடியவில்லையே' என்று வருந்தினார். அவர் நெஞ்சில் இருந்த முள்ளை நீக்கியது, திராவிட முன்னேற்றக் கழகம்.

**குஜராத்துக்கு உதவி**

1970-களில் தமிழ்நாட்டின் முதலமைச்சராக, நம்முடைய நெஞ்சமெல்லாம் நீக்கமற நிறைந்திருக்கக்கூடிய தலைவர் கலைஞர் இருந்தார். குஜராத்தில் மிக கடுமையான பஞ்சம் ஏற்படுகிறது. தமிழ்நாட்டின் முதலமைச்சராக இருக்கக்கூடிய தலைவர் கலைஞர் ஆயிரம் டன் அரிசியை, குஜராத்துக்கு அனுப்பி வைத்தார். அன்றைக்கு மோடிக்கு வயது 18. மோடியின் குடும்பத்துக்கே படியளந்த இயக்கம் திராவிட முன்னேற்றக் கழகம். அப்படிப்பட்ட திராவிட முன்னேற்றக் கழகத்தை 'ஒழித்துவிடுவோம்' என்று பலபேர் சொன்னார்கள். ஆனால், அவர்கள்தான் மறைந்துபோனார்களே தவிர, 75 ஆண்டுகளாக இந்த இயக்கம் நிலைத்துநிற்கிறது.

'டெல்லியின் ஏகாதிபத்தியம் எப்போதெல்லாம் தலைதூக்குகிறதோ அப்போதெல்லாம் தென்னகத்திலிருந்து டெல்லி ஏகாதிபத்தியத்தை வீழ்த்தக்கூடிய குரல் ஒலிக்கும்' என்று பேரறிஞர் அண்ணா சொன்னார். அந்தக் குரலாக இன்றைக்கு தமிழ்நாட்டின் முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் என்கின்ற தலைவரும், பேரறிஞர் அண்ணா, பெரியாரின் கொள்கை வாரிசாக, கொள்கைப் போர்ப்படைத் தளபதியாக, இன்னும் நூறாண்டு காலம் இந்த இயக்கத்தை வழிநடத்திச் செல்லக்கூடிய தலைமை ஏற்கக்கூடிய தகுதி வாய்ந்த தலைவராக எங்களுடைய இளம் தலைவரும் இருக்கும் வரை, இந்த இயக்கத்தை எந்தக் கொம்பனாலும் தொட்டுப் பார்க்க முடியாது."

## அனைவரும் போற்றும் அறிவுத் திருவிழா!

**அறிவுத் திருவிழா குறித்து, ஊடகவியலாளர் வரவணை செந்தில் எழுதிய முகநூல் பதிவில் இருந்து...**

'பொருளுக்கு எத்தகைய கொதிநிலை உண்டோ, அதுபோல் சமூகத்திற்கும் உண்டு. அந்தக் கொதிநிலையிலிருந்து எதிரொலியாக எழுந்ததே திராவிட இயக்கம்.

தி.மு.க. எதிர்த்து வந்த ஒவ்வொரு விஷயமும் இன்றுதான் பிற மாநிலங்களை விழிப்படைய வைக்கிறது - சாதி, இந்தி மொழி ஆதிக்கம், தன்வருமானச் சுரண்டல், கல்வி மூலதனவாதம் எனப் பலவற்றை என்றோ தி.மு.க. எதிர்த்து வெற்றி கண்டவற்றையெல்லாம் அறிந்து, இன்று போராடி வருகின்றன இந்தியாவின் சுயமரியாதையுணர்வு மிச்சமுள்ள மாநிலங்கள்.

ஜல்லிக்கட்டுப் போராட்டம் சூடாக இருந்த நாட்களில்கூட, ஆளுநர் மாளிகை முன் நின்று நீட் எதிர்ப்பை குரல் கொடுத்தது தி.மு.க. தமிழினத்திற்கு என்ன தேவை என்பதை அது மட்டுமே அறியும்.

இந்தப் பின்னணியில் - பா.ஜ.க. ஆட்சி, தேர்தல் ஜனநாயகத்தையே தகர்க்கும் வல்லமையுடன் திகழும் இந்தக் கொடுமையான நேரத்தில்—தி.மு.க. இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் நடத்திய 'அறிவுத் திருவிழா' நிகழ்வு ஒரு பெரும் நிம்மதி.

அது ஒரு விழா அல்ல; ஒரு 'அரசியல் மறுஉயிர்ப்பு'.

ஒரு 'சமூகப் புதிய சிந்தனையின் மேடை'.

ஒரு 'இளைஞர் விழிப்புணர்வு இயக்கம்'.

அறிவுத் திருவிழா — திராவிட இயக்கத்தின் அடிப்படைக் கோட்பாடுகளை இன்றைய தலை முறையின் மனதில் புதிய வடிவில் பதிக்கிறது.

உதயநிதியின் தலைமையில், இளைஞர் அணி வெறும் தேர்தல் கருவி அல்ல - அறிவு எழுச்சியின் கருவி. அரசியலை அறிதல், சமூகத்தைப் புரிதல், தவறை கேள்வி கேட்கும் நீதியுணர்வு - இவை அனைத்தையும் வலுப்படுத்தும் முயற்சி.

இந்த விழா தி.மு.க.வின் எதிர்காலத்துக்குச் செய்யும் நன்மை மிகப் பெரியது:

* இளைஞர்கள் இயக்கத்தின் சிந்தனைகளை ஆழமாகப் புரிந்து கொள்வார்கள்.

* தி.மு.க.வின் புதிய தலைமுறை, அறிவு மையப்படுத்தப்பட்ட அரசியலை அறிமுகப்படுத்தும்.

* எதிர்கால திராவிட இயக்கத்திற்கான சிந்தனையாளர் படையை உருவாக்கும்.

#அறிவுத் திருவிழா — அடுத்த பல பத்தாண்டுகளுக்கு தமிழ்நாடு எங்கு செல்கிறது என்பதைத் தெரிவிக்கும் ஒரு மிக முக்கிய அரசியல் குறியீடு.